DEPOSITION OF WITNESS
( In the Court of the Principal District Munsif, Sankarankovil )

**O.S. No.25/2017**

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | : வசந்தி |
| Father's Name | : -- |
| Village | : -- |
| Taluk | : -- |
| Caste | : -- |
| Calling | : கூலி |
| Religion | : இந்து |
| Age | : -- |
| Date | : 25.04.2019 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 25th April 2019.

**முதல் விசாரணை :**

நான் வழக்கின் வாதி. நான் இன்று இந்த வழக்கில் சத்தியப்பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக் கொள்ள பிரார்த்திக்கிறேன். 13.10.2010 தேதியில் வழக்கு சொத்தை நான் கிரையம் பெற்றேன். அந்த கிரைய ஆவணத்தின் சார்பதிவக நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1. வழக்குசொத்தில் உள்ள குடிநீர் இணைப்பிற்கு நான் செலுத்திய குடிநீர் கட்டண ரசீதுகள் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2. 28.12.2016 தேதியில் நான் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அறிவிப்பு

அனுப்பினேன். அந்த அறிவிப்பின் அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3. மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்குரிய அஞ்சலக ஒப்புதல் அட்டை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.4. வழக்கு சொத்தின் அமைப்பை காட்டக்கூடிய தோராய வரைபடம் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.5. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். நீதிமன்ற ஆணையரின் அறிக்கை நீ.ம.சா.ஆ.1. ஆணையரின் வரைபடம் நீ.ம.சா.ஆ.2.

**முதல் விசாரணை தொடர்ச்சி வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**